JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **3/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W.3** | Prosecution /Defence / Court | |
| Name | **Mahalingam** | Caste | |
| Father's Name | **Duraisamy** | Calling | |
| Village | **Kolathupalayam. Mugasipidariyur, Chennimalai** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 08.07.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு தற்போது நான் ஈங்கூர் அருகில் உள்ள செங்குளம் அரசு பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். 17.11.2008ம் தேதி இரவு 11.30 மணிக்கு நான் அ.சா.1 மற்றும் அ.சா.2ன் அருணாச்சலம் மற்றும் கௌரி அவர்களின் வீட்டில் களவு போய்விட்டது சம்மந்தமாக விசாரிக்க போய் இருந்தபோது பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்த்து மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தார். பார்வை மகசர் சாட்சிகளாக என்னையும் செந்தில் என்பவரையும் சாட்சிகளாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும் சாட்சிகளாக இருக்க ஒப்புக்கொண்டோம். பார்வை மகசரில் முதலாவதாக செந்திலும், இரண்டாவதாக நானும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். அசல் பார்வை மகசர் CC. 241/2009 என்ற வழக்கில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பார்வை மகசரில் சான்றிட்ட நகல் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை பெருந்துறை காவல் நிலைய காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** சம்பவ சமயத்தில் நான் எங்கு பணியாற்றினேன் என்றால் வெள்ளோடு அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தேன். அ.சா.2 எனக்கு பெரியப்பா மகள். சம்பவ சமயத்தில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் குளத்துபாளையத்தில் குடியிருந்தேன். சம்பவ இடத்திற்கும் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு என்றால் சுமார் 13 கி.மி தூரம் இருக்கும். எத்தனை மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது என்றால் இரவு 10.15 மணி இருக்கும். நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் 11 –11.15 மணி இருக்கும். நான் வரும் போது போலிசார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் இல்லை. நான் வந்த பிறகு இரவு சுமார் 11. 30 மணிக்கு வந்தார்கள். நான் செல்லும்போது அங்கு எத்தனை பேர் இருந்தார் என்றால் சுமார் 4, 5 பேர்கள் இருந்தார்கள்.

2) போலிசார் சம்பவ இடத்தில் கைரேகை மற்றும் புகைபடம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அங்கு இருந்த 4, 5 நபர்களிடம் பெயர் விலாசம் கேட்டு எழுதி கொண்டார்கள் என்றால் என்னிடமும், கந்தசாமி, செந்தில் ஆகியோரிடம் கேட்டு எழுதி கொண்டார்கள். போலிசார் வரைந்த மாதிரி வரைபடத்தில் என்னென்ன பொருட்கள் உள்ளது என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எத்தனை படுக்கை அறைகள் உள்ளது என்றால் இரண்டு. எந்த படுக்கை அறையில் களவு போனது என்றால் தென்புறம் உள்ளது அறையில் களவு போனது. தென்புற அறையில் எத்தனை கட்டில் இருந்தது என்றால் ஒரு கட்டில் இருந்தது. மாதிரி வரைபடத்தில் ஒரு கட்டில் இருப்பதாக குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் இரண்டு கட்டில் இருப்பதாக குறித்து கொண்டிருந்தால் அது என் முன்னிலையில் தயாரிக்கப்பட்டது இல்லை என்றால் நான் அதை சரியாக கவனிக்கவில்லை. மாதிரி வரைபடத்தில் உள்ள பொருட்களை வரைந்திருக்கும்போது எவற்றையும் நான் கவனிக்கவில்லை என்றால் சரிதான்.

3) என் முன்னிலையில் போலிசார் பொருட்கள் எதாவது கைப்பற்றினார்கள் என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் இரும்பு பீரோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பார்வை மகசரில் என்னென்ன எழுதி இருக்கிறது என எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரியல்ல தெரியும். போலிசார் விசாரணை முடித்துவிட்டு காவல்

நிலையத்திற்கு வரசொன்னார்கள் என்றால் சரியல்ல. போலிசார் சம்பவ இடத்தில் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் இல்லை. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரிக்கும்போது சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து தான் தயாரிக்கப்பட்டது என்றாலும் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் எனக்கு சகோதரரியின் கணவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை